**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2025**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (நிறுவனம்) 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2017 இன் 05 ஆம் இலக்க உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவன ஒழுங்குவிதியின் 19 ஆம் உறுப்புரை மற்றும் பல்லைக்கழகச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆயுர்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான வளாகத்தில் நடாத்திச் செல்லப்படும் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் கட்டிடத்தில் 2022–2024 | ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து குறித்த தொகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அனுமதி கோரப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு பதிவழிக்க முடியாது | தீர்மானமொன்றுக்கு வந்து, குறித்த கொடுப்பனவுகளை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காலப்பகுதியில் மின்சாரப் பாவனைக்காக ரூபா 6,698,048 செலவுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் குறித்த மீதியைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எனவும், குறித்த தொகையைச் செலுத்துவது தொடர்பில் மேலும் முகாமைத்துவக் குழுவுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,023,595 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 1,836,589 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,860,184 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிறுவனத்தின் செயற்பாட்டு செலவினம் ரூபா 5,275,068 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவினங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| உருப்படி | மீளாய்வாண்டு | கடந்த ஆண்டு | கடந்த வருடத்துடனான அதிகரிப்பு / (குறைவு) | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | நூற்றுக்கு |
| அரச மானியங்கள் | 24,304,000 | 24,465,000 | (161,000) | 0.66 |
| ஏனைய வருமானங்கள் | 1,545,514 | 1,346,789 | 198,725 | 14.75 |
| பாடநெறி வருமானம் | 5,959,333 | 5,636,667 | 322,666 | 5.72 |
| சம்பளங்கள், படிகள் மற்றும் ஊழியர் நலன்கள் | 27,170,504 | 22,429,192 | 4,741,312 | 21.13 |
| வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம் | 724,638 | 340,938 | 383,700 | 112.54 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் | 2,393,936 | 1,640,223 | 753,713 | 45.95 |
| ஏனைய செலவினம் | 3,641,485 | 2,733,548 | 907,937 | 33.21 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதமும் விரைவுச் சொத்துக்கள் விகிதமும் முறையே 1.16:1 மற்றும் 1.13:1 ஆக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அவ்விகிதங்கள் முறையே 1.39:1 மற்றும் 1.37:1 ஆகக் காணப்பட்டன. அதற்கமைய, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் திரவத்தன்மையில் குறைவு காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டில் புதிதாக இணைந்த 12 மாணவர்களையும் உள்ளடக்கியதாக, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிறுவனத்தில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 52 ஆக இருந்ததன் காரணமாக, பிரதான கற்கைநெறிகளுக்கான மாணவர் ஈர்ப்பில் குறைவு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் கடந்த 07 வருட காலப்பகுதியில் நிறுவனத்திற்கு ரூபா 128,723,000 அரசின் மீண்டெழும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 29,598,067 ஆக மாத்திரம் காணப்பட்டது. நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையிலும், சுயாதீனமாகப் பேணிச் செல்லக்கூடிய வகையிலும் நீண்டகால, மத்தியகால மற்றும் குறுகியகால நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பு நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மாணவர் ஆட்சேர்ப்பு மட்டத்தை எட்ட முடியாமல் போயுள்ளதாகவும், அது சுயமாக ஈட்டப்படும் வருமானத்தின் அளவில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுயமாக ஈட்டப்படும் வருமானத்தை அதிகரித்து, திறைசேரி மானியங்களின் மீதான தங்கியிருப்பை படிப்படியாகக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனம் நிறுவப்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு, மாணவர் பதிவை அதிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 மூலோபாயத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவன நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல் கோவையின் 2.3 ஆம் பந்தி மற்றும் இணைப்பு I இன் பிரகாரம், | | |
| (அ) மூலோபாயத் திட்டம் ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப்பட்டு, அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது | எதிர்காலத்தில் உரிய முறையில் பொது திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்தை அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021–2025 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த மூலோபாயத் திட்டம் அவ்வாறு நாளதுவரையாக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் தற்போதைய நிலைக்கும் அது இருக்க வேண்டிய நிலைக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்பதற்காக, நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவாக இடைவெளிப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், இனங்காணப்பட்ட இடைவெளிகள் பொருத்தமான மூலோபாயங்களுடன் நிவர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அவ்வாறான இடைவெளிப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | நிறுவனத்தின் அடிப்படைப் பணிகளை வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டியிருந்ததாகவும், தேவையான ஆவணங்களை உரிய முறையில் தயாரித்து, தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மூலோபாயத் திட்டத்தில் இடைவெளிப் பகுப்பாய்வொன்று உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | மூலோபாயத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் காலப்பகுதிக்கான சுருக்கமான எதிர்வுகூறப்பட்ட நிதிக்கூற்றுகள் மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | நிறுவனத்தின் அடிப்படைப் பணிகளை வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டியிருந்ததாகவும், தேவையான ஆவணங்களை உரிய முறையில் தயாரித்து, தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொழிப்பாக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட நிதிக்கூற்றுகள் மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் நோக்கத்திற்குரிய பணிகளிலான முன்னேற்றம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மூலோபாயத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 04 மூலோபாயங்களுக்கு உரிய 18 செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | விசாரணையில் குறிப்பிடப்பட்ட சில செயற்பாடுகளுக்கு போதுமான பௌதீக மற்றும் மனித வளங்கள் இல்லாததன் காரணமாக சில செயற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளதாகவும், சில செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தைத் தயாரிக்கும் போது, அது மூலோபாயத் திட்டத்திற்கு இணங்கத் தயாரிக்கப்பட வேண்டும். |